REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.த்தின் இதழ் — ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 21உ வியாழன் (3—2—55) ★ ★ வெளியீடு: தை 22உ வெள்ளி (4—2—55) [இதழ் 199

ரூ. 2 கோடி அனுப்பினர்களாம்!

சென்ற ஆண்டு மட்டும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சுமார் 2 கோடியே 20 லட்சம் ரூபாய்கள் அனுப்பப்பட்டன என்று இலங்கை நிதி அமைச்சர் ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

இலங்கையரல்லாதார் மூலதனம் வெளியேற்றப்பட்டது மட்டும் ரூ. 38.64 லட்சம் என்றும், இப்பணம் 805 பேர்களால் எடுத்துச் செல்லப்பட்டது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சுயமாகவும், கட்டாயமாகவும் பிரிவினைக்கு உள்ளானவர்கள் என்ற தலைப்பின்கீழ் 10,918 பேர்களால் ரூ. 1895 லட்சம் அனுப்பப்பட்டதாம். இவர்கள் ரூ. 277.7 லட்சம் அனுப்ப வேண்டுமென்று கோரினர்களாம்.

பண்டிதரின் 'சமதர்மம்' சாயம் வெளுக்கிறது!

காங்கிரஸ் மூலக் கோட்பாட்டில் திருத்தம் செய்ய மறுப்பு

ம. சோ. கட்சித் தலைவர் கோரிக்கைக்குப் பண்டிதர் கூறும் 'விளக்கெண்ணெய்' விளக்கம்

பாரெய்லி, பிப். 2—

பிரதம மந்திரி பண்டித ஜவகர்லால் நேரு, 'காங்கிரசின் கோட்பாடு சோஷலிசம்தான் என்று மாற்றுங்கள்' என்று ம. சோ. கட்சித் தலைவர் ஒருவர் கோரியதை, முடியாதென மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

தாமோதர் ஸ்வரூப் சேத் என்ற ம. சோ. கட்சித் தலைவர் ஒருவர், பண்டித நேருவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், சோஷலிசம் மிக நல்ல லட்சியக் கோட்பாடு என்று பண்டித நேரு சீன சென்று திரும்பிய பிறகு வலியுறுத்திப் பேசி வருவதற்கொப்ப, காங்கிரஸ் கோட்பாட்டை சோஷலிசக் கோட்பாடாக மாற்றியமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாராம்.

அக்கடிதத்திற்குப் பதில் எழுதியுள்ள பண்டித நேரு தமது கடிதத்தில், "நீங்கள் கூறியுள்ளபடி, காங்கிரசின் கோட்பாட்டை மாற்றியமைப்பதினுல் குறிப்பான நன்மை எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை; நிச்சயமாக, ஒரு பொருளின் உள்ளடக்கமே மிக முக்கியமானதாகும்; இதற்கு அப்பாலும் சோஷலிசம் என்ற சொல்லுக்கு எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன; அதற்கு எவ்விதத் திட்டமான விளக்கமும் இல்லை;

"எது அவசியமென நான் நினைக்கிறேன் என்றால், காங்கிரஸ் தனது கொள்கையை இன்னும் திட்டவட்டமாக, தெளிவாக வகுக்க வேண்டுமென்பதுதான்," என்று குறிப்பிட்டிருக்கிறாராம்.

அணுகுண்டு யுத்தம் வந்தால்..

ஐரோப்பாவிற்குத்தான் ஆபத்து!

"அணுகுண்டு உலக யுத்தம் வந்தால் முதல் முதலில் ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் கடுமையான சேதம் ஏற்படும்; அமெரிக்காவும் ரஷ்ய அணுகுண்டு தாக்குதல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது," என்று, ரஷ்ய இராணுவ நிபுணர் ஒருவர் தாம் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மேற்கு ஐரோப்பாவில் ஜன நெருக்கம் அதிகமாயிருப்பதால் தொழிற்சாலைகளும் அங்கு குவிந்துள்ளன; எனவே அங்கே அணுகுண்டு தாக்குதலினால் சேதம் அதிகமாக ஏற்படும். தூரத்தில் இருந்துவிடுவதால் நாம் தப்பிவிடலாம் என்று அமெரிக்காவும் எண்ணவேண்டியதில்லை; கடல்தாண்டி அணுகுண்டுகளை வீசும் நவீன சக்திகளும் தற்போது உள்ளன; எனவே, ரஷ்யாவும், அணுகுண்டு கையாளும் ஆக்கிரமிப்பாளருக்கு சளைத்ததல்ல," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

விலகவில்லை!

சென்னை, பிப். 2—

மந்திரி சபையிலிருந்து தான் விலகிக்கொள்வது நிச்சயம் என்று உலவிவரும் வதந்தி ஆதாரமற்றது, தவறானது என்று மந்திரி ராமநாதபுரம் ராஜா கூறியிருக்கிறார்.

மூன்று மாத விடுமுறையில் அவர் வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்யப்போவதாக உள்ள வதந்தியும் உண்மையல்லவென்றும் அவர் மறுத்திருக்கிறார்.

தென்னாட்டில் பரீட்சார்த்த எஃகு தொழிற்சாலை

நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தி அமைக்கப்படலாம்

நான்காவது திட்டமாக இருக்குமென இந்திய சர்க்கார் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, பிப். 2—

தென் இந்தியாவில் கிடைக்கும் லிக்னைட் என்னும் நிலக்கரியைப் பயன்படுத்தி தெற்கே ஒரு சிறிய பரீட்சார்த்த எஃகுத் தொழிற்சாலையை அமைப்பது பற்றி இந்திய சர்க்கார் யோசனை செய்து வருவதாக இந்திய சர்க்கார் உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டி கூறியிருக்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் ரஷ்ய உதவியுடன் எஃகுத் தொழிற்சாலை ஒன்று அமைக்க இரு சர்க்கார்களுக்கிடையேயும் கையெழுத்தான ஒப்பந்தத்திற்குப் பின், பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் மூன்றாவது எஃகுத் தொழிற்சாலை அமைப்பது பற்றி பிரிட்டிஷ் நிபுணர்கள் குழு ஒன்று இந்தியாவிற்கு மார்ச்சு மாதத்தில் வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறினார்.

அத்துடன், இந்திய சர்க்கார், நான்காவது தொழிற்சாலை பற்றியும் ஆலோசனை செய்கிறது என்றார்.

"இந்த நான்காவது திட்டம், தென்இந்தியாவில் கிடைக்கும் லிக்னைட் நிலக்கரியைப் பயன்படுத்தி தெற்கே அமைக்கப்படும்," என்று அவர் குறிப்பிட்டார்.

இது பரீட்சார்த்தத் திட்டமாக இருக்குமென்றும், இதன் உற்பத்தி அளவு, சுமார் ஒரு லட்சம் டன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அத்திட்டம் வெற்றி பெற்றால், அதை மீண்டும் அபிவிருத்தி செய்வது பற்றி சர்க்கார் யோசிக்கும்," என்றார்.

"லிக்னைட் கரியைப் பயன்படுத்தி எஃகு செய்வது ஆராய்ச்சிக்கூட அளவில் தான் இருக்கிறது என்றும், பரீட்சார்த்தத்திட்டம் அதன் முழு வியாபார சந்தர்ப்பங்களைத் தெளிவுபடுத்தும்," என்றும் அவர் கூறினார்.

சுமார் 2.51 கோடி ரூபாய் பெறுமான 8,195 இயந்திரக் கலப்பைகள் 1953—54-ல் இறக்குமதி ஆயின.

மாநில திருத்தக் குழுமுன் ஆர்ப்பாட்டம்

20 மைல் நெடுக மக்கள் ஆரவாரம்

பூர்னியாவை பீகாரிலிருந்து பிரிப்பதற்கு எதிர்ப்பு

பூர்னியா, பிப். 2—

பீகார் மாநிலத்தில் இருக்கும் பூர்னியா பகுதியை தன்னுடன் சேர்க்க வேண்டுமென மேற்கு வங்கம் கிளர்ச்சி செய்து வருகிறது. மேற்கு வங்கக் கோரிக்கைக்கு இணங்க முடியாது என பீகார் அரசாங்கம் எதிர்ப்புக்காட்டி வருகிறது.

இந்தியில் மாநில திருத்தக் குழு, சாட்சியம் பெற பீகாருக்குச் சென்று இருக்கிறது. திருத்தக் குழு உறுப்பினர்களுக்கு உண்மை உணர்த்தும்வகையில், பூர்னியா, மக்கள் கொடி பிடித்தும், முரசறைவித்தும், கொம்பு ஊதியும், ஒலிகளை முழக்கியும், பூர்னியா முழுதையுமோ அல்லது ஒரு பகுதியையோ மேற்கு வங்கத்துடன் சேர்க்க திருத்தக் குழு ஒப்பக்கூடாது என்பதற்காக, மேற்படி குழுவை ஆர்ப்பாட்டத்துடனும், ஆரவாரத்துடனும் வரவேற்று இருக்கிறார்கள்.

பீகாரிலேயேதான் நாங்கள் இருப்போம் என காடியார் முதல் பூர்னியா வரையில் 20 கல் தொலைவில் உள்ள மக்கள், அவ்வழியே வந்த திருத்தக் குழு உறுப்பினர் முன் பெரும் ஆரவாரத்துடன் கூறியுள்ளனர்.

குழு தலைவரான பாசில் அலி உடல் நலம் கெட்டிருப்பதின் காரணமாக, குழு உறுப்பினர்களான சர்தார் கே. எம். பணிக்கரும், இருதயநாத் குன்ஸ்ரு மட்டும்தான், அங்கு வந்து 60 சாட்சியங்கள் வரை பெற்றுள்ளனர்.

தாய்லாந்து கலந்து கொள்கிறது

பாங்காங், பிப். 2—

இந்தோனேஷியாவில் அடுத்த ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் ஆசிய ஆப்பிரிக்க மாநாட்டில், தாய்லாந்தும் கலந்துகொள்ளும் என்று வெளிவிவகார இலாக்கா மந்திரி வான்வைத்தா கார்ன் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

உணவு சத்து ஆராய்ச்சி நிலையமும் வெளியேறுகிறது

இந்தியப் பேரரசின் போக்கிற்கு குன்னூர் தி. மு. க. கண்டனம்

"சென்னை மாநிலத்தில் குன்னூரிலுள்ள தேசிய உணவு சத்து ஆராய்ச்சி நிலையத்தை ஹைதராபாத்துக்கு மாற்றுவதென்று மத்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதை இக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. எக்காரணத்தைக் கொண்டும் இந்த ஆராய்ச்சி நிலையத்தை மாற்றக் கூடாதென்று மத்திய சர்க்காரிடத்தில் போராட வேண்டுமென்று மாநில சர்க்காரையும் பொதுமக்களையும் இக்குழு கேட்டுக்கொள்ளுகிறது."

—இவ்வாறு, தீர்மானம் ஒன்றை குன்னூர் தி. மு. கழகச் செயற் குழு நிறைவேற்றி இருக்கிறது.

23—1—55 இரவு 7-45 மணிக்கு தோழர் டி. பி. எஸ். மணி அவர்கள் கடையில், குன்னூர் தி. மு. கழகச் செயலாளர் தலைமையில் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. பொங்கல் விழா வரவு - செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பின்னர், "குன்னூர் நகராண்மைக் கழக இலவச வாசகசாலையில் எல்லா பத்திரிகைகளும் இடம் பெற்றும் நமதியக்க ஏடுகள் ஒன்றும் இடம் பெறாதது பெருங் குறையாக உள்ளது. நமதியக்க ஏடுகளாம், 'நம் நாடு' தினசரியும், 'திராவிட நாடு', 'முரசொலி,' 'தென்றல்' போன்ற வார ஏடுகளையும் இனியாவது மக்கள் பார்வைக்கு வைக்குமாறு குன்னூர் நகராண்மைக் கழக விசேட ஆணையாளரைக் கேட்டுக்கொள்ளுகிறது," என்று மற்றோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடாதே!

கெய்ரோ, பிப். 2—

அறிவிக்கப்பட்டுள்ள துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தில், ஈராக் கையெழுத்திட்டால் அரபு லீகிலிருந்து ஈகிப்து வெளியேறவேண்டுமென்று, ஈகிப்திய பிரதமர் கர்னல் அப்டெல் நாசர் தெரிவித்திருக்கிறார். இதர அரபு நாடுகளைக் கொண்டு அரபு லீக் நிறுவப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை
சென்னை 3—2—1955 வியாழன்

‘மாபெரும் துரோகம்’

குறைந்த அளவில் உறுப்பினர்களைக்கொண்ட ம. சோ. கட்சியை, திரு-கொச்சி ஆட்சிப் பொறுப்பில் அமரவைத்தது வடிகட்டின அரசியல் மோசடியாகும். அந்த மோசடிக்கு மூலகாரணமாக இருந்தது, உலகில் வேறு எங்கும் கூறிக்கொள்ளப்படாத அளவிற்கு, ‘ஆத்மார்த்த அரசியல் புனிதம்’ பற்றிப் பன்னிப் பன்னிப் பேத்தித் திரியும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியே யாகும்.

தன் சொந்த எண்ணிக்கை பலத்தை மட்டுமே நம்பி ஒரு விநாடி காலத்திற்குக் கூட ஆட்சியில் நிலைத்திருக்க முடியாத ஒரு கட்சியை, மற்றொரு அரசியல் கட்சி கிம்பு வைத்துக் கட்டி சிம்மாசனத்தில் ஏற்றி வைப்பது மக்களாட்சி முறையாகாது. இத்தகு அரசியல் விசித்திரக் கூத்து, மக்களாட்சி முறையில் இயங்கிவரும் வேறு எந்த நாட்டிலும் இதுவரை நிகழ்ந்திருப்பதாகவும் சொல்வதற்கில்லை. இது, காங்கிரஸ் வியாபார முத்திரை பொறித்த இந்திய மக்களாட்சி வகையைச் சேர்ந்த ஒன்ருக இருக்கலாமே அல்லாது, உண்மையான மக்களாட்சி முறையாகக் கொள்வது முடியாது.

மக்களாட்சி என்பது ஒரு மனித சமுதாய வாழ்க்கை வழியாகும். சமூக நல உள்ளடக்கமும், அதைப் பெறுவதற்கான நடை முறையும் இணைந்த ஒரு முழுப் பொருளுக்குத்தான் மக்களாட்சி என்ற பெயர் பொருந்தக் கூடும். மக்களாட்சிக் கோட்பாட்டில் உள்ள சமூக நல உள்ளடக்கத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, அதை அடைவதற்காகக் கையாளப்பட வேண்டிய நடைமுறைக்குப் பதிலாக வேறு ஒரு நடைமுறையை செயலாற்ற முனைவதோ ஒப்புவதோ, ஒருக்காலும் மக்களாட்சியாக இருக்க முடியாது. அந்நிலையில், ‘மக்களாட்சி’ என்ற சொல்லுக்கு முன் ஒரு பண்புச் சொல்லைப் போட்டுக்கொள்ள வேண்டியதுதான் நியாயமாகும். எனவே, திரு-கொச்சியில் காங்கிரஸ் கட்சியின் பின்னணி பலத்திஞல் பதவி பெற்ற சிறுபான்மை ம. சோ. கட்சி ஆட்சியை; ‘இந்திய காங்கிரஸ் மக்களாட்சி’ என்று குறிப்பிட்டால்தான், நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்களாட்சிக்கும், அதற்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளுவது இலகுவாகும்.

காங்கிரஸ் கட்சியைக் கட்டிலும் தீவிரமான சமூக நலக் கோட்பாடுகளைக் கொண்டு இயங்கி வருவது ம. சோ. கட்சி என, அதன் அகில இந்தியத் தலைவர்கள் அடிக்கடி வின் அதிரக் கூறிவருகின்றனர். ஆனல், அந்தக் கட்சியின் தோற்றமும், வளர்ச்சியும் அக்கூற்றை மெய்ப்பிப்பதாக இருக்கவில்லை. காங்கிரசைப் போன்றே ம. சோ. கட்சியின் அடிப்படையும் ‘யானை உண்ட விளாங்கனி’ தான் என்பதை திரு-கொச்சியில், அக்கட்சி காங்கிரஸ் ஆதரவுடன் பதவி ஏறியது, ஐயத்திற்குத் துளியுமிடமின்றி வெட்டவெளிச்சமாக்கிவிட்டது.

ம. சோ. கட்சிக்கும், அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும் ‘ஜென்மப் பகை’ என்பது உலகறிந்த இரகசியம். அவ்விரண்டு கட்சிகளுக்கும், அடிப்படை கொள்கையில்தான் முரண்பாடோ, நடைமுறையில்தான் வேறுபாடோ, அல்லது தனித்தனி நபர்களிடம் தான் விரோதமோ, உண்மையை யார் கண்டார்கள்? ஆனல், ‘விரோதிக்கு விரோதி நண்பன்’ என்ற அதிகார அரசியல் தத்துவத்திற்கு ஒப்ப, திரு-கொச்சியில், அதிகாரத்திலுள்ள ம. சோ. கட்சிக்கும், அதை இதுவரை தீவிரமாக எதிர்த்துவந்த கம்யூனிஸ்டு கட்சிக்கும் ‘நட்புறவு’ ஏற்பட்டு இருக்கிறது.

இதோ, ‘விரோதிக்கு விரோதி நண்பன்’ என்ற தத்துவத்தை மேற்கொண்டுதான், இடதுசாரி முன்னணி பதவி பெற விடக்கூடாது என்பதற்காக, ம. சோ. கட்சிக்கு ஆதரவு காட்ட திரு-கொச்சி காங்கிரஸ் கட்சி முன்வந்தது. அத்தகு ஏற்பாடு அவசியம் என்று தான் நம்பி வந்தவரையில், திரு-கொச்சி காங்கிரசும், ம. சோ. கட்சியை ஆதரித்து வந்தது. அது அவசியமில்லை என்று தனது அறிவில் பட்டதும், காட்டிவந்த ஆதரவை மீட்டுக்கொண்டது திரு-கொ. காங்கிரஸ். காங்கிரஸ் கட்சிக்கு பதிலாக, அதே ஆதரவை ம. சோ. கட்சிக்குக் கொடுக்க கம்யூனிஸ்டு கட்சி கிளம்பி இருக்கிறது. விசித்திர சித்தர்களின் விநோத அரசியல் இரசமஞ்சரி இது!

“திரு-கொச்சியில் தேர்தல் காலத்தில் பி. சோ. கட்சித் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகளை மறந்து, மக்களுக்கு பி. சோ. கட்சி துரோகம் செய்துவிட்டது.”

“பி. சோ. மந்திரி சபை காங்கிரஸ் மந்திரி சபையைவிட எந்தவகையிலும் சிறந்ததல்ல என்பதை கம்யூனிஸ்டு கட்சி ஏற்கனவே எச்சரித்திருக்கிறது.

“கடந்த ஒரு ஆண்டு அனுபவம் கம்யூனிஸ்டு கட்சி கூறியது எவ்வளவு சரி என்பதை நிருபித்துவிட்டது.

“பி. சோ. கட்சி அதிகாரத்தில் தொடர எந்தவிதத்திலாவது கம்யூனிஸ்டு கட்சி உதவுவது என்பது, மக்கள் நலனுக்குச் செய்யும் துரோகமாகும்.

“பி. சோ. மந்திரி சபை மக்களால் வெறுக்கப்பட்டு மக்களின் ஆதரவிழந்து நிற்கிறது.

‘பழைய செருப்பை எடுத்து எறிவதுபோல் பி. சோ. மந்திரி சபையை மாற்றிவிட்டு, காங்கிரஸ் அதிகாரத்திற்கு வர முயற்சிக்கிறது.”

இவ்வாறு எல்லாம், பட்டம் தாணு அமைச்சர் குழுவின் அவலட்சணங்களை சுட்டிக் காட்டியுள்ளார் கம்யூனிஸ்டு கட்சியின் ‘பொலிட்பீரோ’ உறுப்பினரான தோழர் இராமமூர்த்தி. அத்துடனும் அவர் நிற்கவில்லை.

“மீண்டும் காங்கிரசை அதிகாரத்தில் விடாமல் இருப்பதற்காக பி. சோ. மந்திரி சபையை ஆதரிக்கவேண்டுமென்று சில வட்டாரங்களில் கூறப்படுகிறது.

“திரு-கொச்சியின் இன்றைய அரசியல் நிலைமைக்கு பரிகாரம் காணும் வழி பி. சோ. மந்திரி சபையோ காங்கிரஸ் மந்திரி சபையோ அல்ல.”

மேற்கண்டவாறு கூறிய அவர்தான், அவர் தீட்டித் தரும் திட்டப்படி இயங்கிவரும் கம்யூனிஸ்டு கட்சிதான், அவர் சித்தரித்துள்ளபடி ‘பழைய செருப்பை’ப் போன்றுள்ள பட்டம் தாணுவின் மந்திரி சபைக்கு ஆதரவு காட்டி வருகிறது!

அவர் கூறியபடியே, ‘தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து மக்களுக்கு துரோகம் செய்துவிட்ட’ அதே ம. சோ. கட்சிக்குத்தான், அவருடைய கம்யூனிஸ்டு கட்சி முட்டுக்கொடுத்து இருக்கிறது!

அவர் உரைத்தபடியே ‘மக்களால் வெறுக்கப்பட்டு மக்கள் ஆதரவு இழந்து நிற்கிற’ ம. சோ. கட்சி, குடை கவிழ்ந்துவிடாமல் இருக்க, கம்யூனிஸ்டு கட்சி தோள் கொடுத்துத் தாங்கிக்கொண்டு இருக்கிறது!

அவர் அறிவித்துள்ளபடியே ‘திரு-கொச்சியின் இன்றைய நிலைமைக்குப் பரிகாரம் காணும் வகையற்று’க் கிடக்கும் ம. சோ. கட்சி ஆட்சி சரிந்துவிடாமல் இருக்க, அவருடைய கம்யூனிஸ்டு கட்சி ஒதபானச் சுவராக இருக்கிறது!

‘பி. சோ. கட்சி அதிகாரத்தில் தொடர எந்தவிதத்திலாவது கம்யூனிஸ்டு கட்சி உதவுவது என்பது, மக்கள் நலனுக்குச் செய்யும் பெருந்துரோகமாகும்’ என தோழர் இராமமூர்த்தி அவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளபடியே ம. சோ. கட்சி ஆட்சியைத் தொடர்ந்து அதிகாரத்தில் நீடிக்கவைப்பதின் மூலம், பொதுவாக திரு-கொ. மக்களுக்கும், குறிப்பாக திரு-கொ. தமிழ் மக்களுக்கும், கம்யூனிஸ்டு கட்சி பெரும் துரோகம் செய்திருக்கிறது!

பாதுகாப்பற்ற சிறை!

மைசூர், பிப். 2—

மைசூர் அரசாங்கம் ‘குறைந்த பாதுகாப்புள்ள’ சிறைக்கூடம் ஒன்றை ராமநகரம் அருகே அமைப்பதுபற்றி தீவிரமாக யோசித்து வருகிறதாம்.

அதிக உயரமில்லாத சுவர் எழுப்பி சிறை அமைத்து, அங்கு, பொறுக்கி எடுக்கப்பட்ட 300-கைதிகளைக் குடியேற்றி, 600-ஏக்கர் நிலத்தை விவசாயத்திற்காக ஒதுக்கி அவர்கள் வேலை செய்யுமாறு கோரப்படுவார்களாம். அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு கண்காணிப்பிருக்காதாம்.

மைசூர், பெங்களூர், பெல்லாரி சிறைகளிலிருந்து 300 கைதிகளைப் பொறுக்கி எடுத்து, நூகு, நாக்கவல்லி திட்டங்களில் வேலை செய்ய ஏவப்படுவார்கள் என்றும், அவர்கள் அங்கு நல்ல நடத்தையுடையவர்களாகக் காணப்பட்டால் அவர்களின் குடும்பத்துடன் வசிக்க ஏற்பாடு செய்யப்படுமென்றும் கூறப்படுகிறது.

மராத்தி - குஜராத்தி மொழி தகராறு

மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவரை குஜராத்தி மொழி நிறுவனத் தலைவர் சாடுகிருர்

அகமதாபாத், பிப். 2—

‘தாங்ஸ்’ பிரதேசத்தில் உள்ள குஜராத்திப் பள்ளிகளை மூடிவிட வேண்டும் என்று மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரான டி. ஆர். தியோகிரிகர் என்பவர் அறிக்கை விட்டதற்கு மகா குஜராத்தி சீமா சமிதி என்ற குஜராத்தின் மிக முக்கியமான மொழி வழி அமைப்பு நிறுவனம் தனது வன்மையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது.

அந்த சமிதியின் தலைவரான கஸ்தூரிபாய் லால்பாய் என்பவர், “பிரதமர் நேரு போன்றவர்கள், காங்கிரஸ்காரர்கள் மொழி வழிப் பிரசாரத்தில் ஈடுபடக் கூடாதென எச்சரித்திருக்கும்போதும் இன்னும் மாநில புனரமைப்புக் குழு வேலை செய்து கொண்டிருக்கும் போதும், மகாராஷ்டிர பிரதேசக் காங்கிரஸ் தலைவர் இம்மாதிரி விரும்பத்தகாத தவருன பிரச்சாரத்தில் ஈடுபடுவது வருந்தத்தக்கதாகும்” என்று குறிப்பிட்டிருக்கிருர்.

‘தாங்ஸ்’ பகுதியின் ஆட்சி மொழி பற்றி பம்பாய் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்; தனது பழைய உத்திரவை அதரத்து செய்யவேண்டும்; ‘தாங்ஸ்’ பகுதியில் மராத்திதான் ஆட்சி மொழி என்ற அரசாங்க உத்திரவிற்கு பலமான எதிர்ப்பு இருப்பதுடன், அது தவருனது என்று பலரும் எடுத்துக் காட்டுகின்றனர் என்றும், சமிதியின் தலைவர் குறிப்பிட்டிருக்கிருர்.

பல்கலைக் கழகத் தலைவர்

பரீட்சை எழுதுவார்

காஷ்மீர் பல்கலைக் கழகத்தின் வேந்தரான காஷ்மீர் இளவரசர் கரன்சிங், தனது தலைமையில் இயங்கும் பல்கலைக் கழகத்தின் தேர்வு எழுதப் போவதாகத் தெரிவித்திருக்கிருர்.

அடுத்த ஆண்டில் அவர் எம். ஏ. தேர்வு எழுதப் போகிருராம். அவர் இதே பல்கலைக் கழகத்தில், 1952-ல், பி. ஏ. பட்டம் பெற்றவர்.

“கடந்த இரண்டு ஆண்டுகளில், நீங்கள் ஏன், எம் ஏ, தேர்வுக்கு எழுதவில்லை?” என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டனர்.

தனக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிக வேலை என்றும் பல்கலைக் கழக வேந்தர் தேர்தலில் தோற்றுப் போனல் அது நன்ருக இராது என்பதாலேயுமே எழுதவில்லை என்று அவர் பதில் அளித்திருக்கிருர்.

மந்திரியின் மகனுக்கு இலவசக் கல்வி

பம்பாய் மாநில மந்திரிகளில் ஒருவர், பம்பாய் நகரசபைப் பள்ளி ஒன்றில் தமது மகனுக்கு இலவசமாகக் கல்வி போதிக்க வேண்டும் எனக் கோரி கடிதம் எழுதி, இலவசமாகப் படிக்கும் வசதி பெற்றுள்ளார் என்ற தகவலை ராம் ஜோஷி என்ற பம்பாய் நகரசபை உறுப்பினர் சபையில் ஆரம்பக் கல்விக்கான வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது வெளியிட்டிருக்கிருர்.

முதலில், மந்திரி, அதிகாரிகளுக்கு எழுதியபோது, அதிகசரிகள் இலவசச் சம்பளம் தருவதற்குரிய ‘சாதி’யைச் சேர்ந்தவர் என்ற விபரம் இல்லை என்று கூறி மனுவை நிராகரித்தனராம். பின்னர் மந்திரி, தான் ‘அரிஜன்’ வகுப்பைச் சேர்ந்தவர் என்றுகூறி, தன் மகனுக்கு இலவசச் சம்பளம் கோரிஞராம். அரிஜன மாணவர்களுக்கு சர்க்கார் தரும் இலவசக் கல்வி வசதி அந்த மாணவருக்கும் தரப்படும் என்று நகரசபையினர் உத்தரவிட்டனர் என்றும் ராம் ஜோஷி தெரிவித்திருக்கிருர்.

‘புதிய மார்க்சீய கட்சியுடன் நாங்கள் சேரவில்லை’

மக்கள் ஜனநாயக முன்னணி தலைவர் அறிவிப்பு

ஐதராபாத், ஜன. 31—

“பம்பாயில் துவக்கப்பட்டுள்ள ஐக்கிய மார்க்சீயக் கட்சியுடன் தமது கட்சி சேர்ந்துவிடவில்லை,” என்று மக்கள் ஜனநாயக முன்னணியின் சட்டசபைக் கட்சித் தலைவரான பி. டி. தேஷ் பாண்டே அறிவித்திருக்கிருர். மேலும் அவர் சொன்னர்:—

“ஐதராபாத்தில் உள்ள சோஷலிசத் தொண்டர்கள் முகாம் என்பதுகூட புதிய கட்சியுடன் சேர்ந்துவிட்டது என்ற செய்தியைப் பொறுத்த வரையில், அந்த முகாம் நெடுநாட்களுக்கு முன்பே கலைக்கப்பட்டுவிட்டது.

“டாக்டர் என். எம். ஜெயசூரியா தனது சொந்த ஹோதாவிலேயே பம்பாயில் நடைபெற்ற மார்க்சீயக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிருர்; ஜனநாயக மக்கள் கட்சியிலிருந்து அவர் ஏற்கனவே விலகிவிட்டார்.

“கம்யூனிஸ்டு கட்சி, எந்த ஒரு ஜனநாயக முன்னணி அமைவதையும் வரவேற்கும்; ஆனல், கட்சி அமைவதை அல்ல; ஜனநாயக ஐக்கியத்தில் ஒரு அரசாங்கம் அமைப்பதற்காகவே கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கும்.”

ஆந்திர தேர்தல்

காங்கிரஸ் ஆட்சியின் முடிவுக்கு ஆரம்பம்

கம்யூனிஸ்டுத் தலைவர் வர்ணனை

“ஆந்திர தேர்தல், இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியின் முடிவுக்கு ஆரம்பமாக இருக்கும்,” என்று கம்யூனிஸ்டு தலைவரான ஹிரன் முகர்ஜி, விஜயவாடாவில் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

“நாளாவட்டத்தில் காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுகள் மீது நயவஞ்சகமான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்ற கீழ்நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். இதை காங்கிரஸ் தலைவர்கள் வேண்டுமென்றே வெளிப்படையாகச் செய்கிருர்கள். ‘அப்படிச் செய்தேனும், கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக மக்களை ஓட்டுப் போடச் செய்யலாம்,’ என்று கருதுகிருர்கள்போலும்,” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

பிறர் சொன்னதையே அவரும் சொல்கிருர்!

“வட இந்தியர்கள், குறைந்த அளவு, தென்னிந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றையாவது படிக்க வேண்டும்; தென்னிந்திய மொழிகளிலுள்ள இலக்கியங்கள் இந்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்”

என்று காஷ்மீர் சாதர்-இ-ரியாசத் யுவராஜா கரன்சிங், ஜம்முவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

டாக்டருக்கு தூக்கு

கெய்ரோ, பிப். 2—

டாக்டர் மௌசா மஜ்ஜுக் என்ற மருத்துவ அதிகாரி ஒருவர் ஒற்றர் படையில் அங்கம் பெற்றிருந்தார் என்ற காரணத்திற்காகத் தூக்கிலிடப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

சாமுவேல் அஜார் என்ற ஒரு உபாத்தியாயருங்கூட தூக்கிலிடப்பட்டாராம்.

இராணுவ நீதி மன்றம் ஒன்று, வேவு பார்த்த குற்றத்திற்காக தூக்கு தண்டனை விதித்த 13 பேர்களில் இவர்கள் இருவரும் இடம் பெற்றனராம்.

'திரு-கொச்சி மக்களுக்கு பி. சோ. கட்சி துரோகம் செய்துவிட்டது'

அம்மந்திரி சபை நீடிக்க கம்யூனிஸ்டு கட்சி உதவுவது பெரியதொரு துரோகம்'

தோழர் பி. இராமமூர்த்தியின் கண்டிப்பான பேச்சு

"திரு—கோச்சியில் தேர்தல் காலத்தில் பி.-சோ. கட்சித் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகளை மறந்து, மக்களுக்கு பி.-சோ. கட்சி துரோகம் செய்துவிட்டது ;..........பி.-சோ. மந்திரி சபை அதிகாரபீடத்தில் தொடர்ந்து இருக்க எந்தவிதத்திலாவது கம்யூனிஸ்டு கட்சி உதவுவதேன்பது, மக்கள் நலனுக்குச் செய்கின்ற பெரியதொரு துரோகச் செயலாகும்."

—இவ்வாறு, சென்னை சட்டசபை ஐ மு. வின் தலைவரும், அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை நிர்ணய கமிட்டி (போலிட் பீரோ) உறுப்பினருமான பி. இராமமூர்த்தி குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது :—

"பி.-சோ. மந்திரி சபை, காங்கிரஸ் மந்திரி சபையைவிட எவ்வகையிலுமே சிறப்புடையதாகாது.

"பி.-சோ. மந்திரி சபை மக்களால் வெறுக்கப்பட்டு, மக்களின் ஆதரவை இழந்து நிற்கிறது. பழைய செருப்பை எடுத்து விசியெறிந்துவிடுவது போல், பி.-சோ. மந்திரி சபையை மாற்றிவிட்டு, காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் வர முயற்சிக்கிறது.

"திரு—கொச்சியின் இன்றைய அரசியல் சூழ்நிலைமைக்குப் பரிகாரம் காணும் வழி, பி.-சோ. மந்திரி சபையோ, காங்கிரஸ் மந்திரி சபையோ அமைந்து விடுவதல்ல ;

"அதுமட்டுமின்றி, பி.-சோ. கட்சியினுடையவோ அல்லது தி. த. நா. கா.-வினுடையவோ ஆதரவில்லாமல், காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடத்தில் அமர முடியாது. பி.-சோ. மந்திரி சபை அதிகார பீடத்தினின்றும் கவிழ்க்கப்பட்டால், ஐ. மு. அதிகாரத்தில் வருவதை தடை செய்யக்கூடியவை பி.-சோ.-வும், தி. த. நா. கா.-வும் தான் ; இவை, காங்கிரசுக்குத்தான் ஆதரவளிப்பனவாகும்.

"தி. கொ. சட்டசபை உறுப்பினர்களான பி.-சோ., தி. த. நா. கா. உறுப்பினர்கள், பகிரங்கமாக, ஐக்கிய முன்னணிக்குத்தான் தங்களது ஆதரவு என்று கூறி, மக்களது கோரிக்கைகளையும், ஆசைகளையும் நிறைவேற்றி வைப்பதற்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும்.

"இதுவன்றி, வேறு ஏதாவது செய்தால், தேர்தலில் மக்கள் ஒதுக்கித் தள்ளிய காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வரும் நிலைமை ஏற்படும் ; அதற்கு பி.-சோ.-வும், தி. த. நா. கா.-வினரும்தான் முழு பொறுப்பாளிகளாவர்."

பட்டம் ஆட்சியின் நிலச் சீர்திருத்தம்!

நில உடைமைக்கு எல்லை போடுகிறார்களாம்!

திருவனந்தபுரம், பிப். 1— ஒரு குடும்பம் அதிக பட்சம் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்பதைக் கட்டுப்படுத்தும் மசோதாவை தனிக் குழுவிற்கு விடும் பிரேரணை ஒன்றை மாநில ரெவின்யூ அமைச்சர் சட்டசபையில் கொண்டுவந்திருக்கிறார்.

இக்கட்டுப்பாடு மசோதா, 5 பேர் அடங்கிய ஒரு குடும்பம் இருபோக சாகுபடி நஞ்சை நிலம் 15 ஏகரா அல்லது 15 ஏகரா தென்னந் தோப்புகளும், அல்லது ஒருபோக சாகுபடி நஞ்சை நிலம் 22½ ஏகரா அல்லது இதர வகை நிலங்கள் 30 ஏகரா வைத்துக்கொள்ளலாமென்றும், உயர்ந்த பட்சம் இருபோக சாகுபடி நஞ்சை நிலம் 25 ஏகராவாக வரையறுக்கப்பட வேண்டுமென்றும் கூறுகிறது.

5 பேருக்கு மேற்பட்ட குடும்பத்தில், அதிகப்படியான ஒவ்வொரு நபருக்கும் இருபோக சாகுபடியுள்ள ஒரு ஏகர் நிலமோ, அல்லது அதற்குச் சமமான மற்றொரு வகை நிலமோ வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கிறது.

இம்மசோதா, ஏற்கனவே நிலம் வைத்திருப்போருக்கு உயர்ந்த பட்ச வரம்பு நிர்ணயிக்கவில்லையென்றாலும், அவர்களது நில உடைமை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

அதிகப்படியான நிலங்களை வினியோகிக்க ஒரு 'நில போர்டும்' ஏற்படுத்த இம்மசோதாவின்படி திட்டமிடப்பட்டிருக்கிறது

இம்மசோதா பற்றிய பொதமக்களின் கருத்தைத் தெரிவிக்கும் வகையில், மசோதாவைக்கொண்டு வந்த ரெவின்யூ அமைச்சர், சிலர் அதிகபட்ச நிலவரம்பு அமைக்கப்படவேண்டுமென்றும், வேறு சிலர் கூடாதென்றும், மற்றும் சிலரோ, நஷ்டஈடு தராமல் நிலங்களை சர்க்காரே எடுத்துக்கொள்ளும் மசோதா இது என்றும் கருதுவதாகக் கூறினர்.

அணு நோய்க்கும் மருந்து

ஆசிரமவாசி கண்டுபிடித்தார்

அணுகுண்டு தாக்குதலினால் ஏற்படும் கதிர் இயக்கம் மனித உடலை தாக்காமல் பாதுகாக்கும் மருந்து ஒன்றை பாத்ரி ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி நாராயணனந்த் என்பவர் கண்டுபிடித்திருக்கிறாராம்.

இமயமலையில் கிடைக்கும் செடி ஒன்றுதான் இம்மருந்தாம்.

அச்செடியின் இலைகளை அரைத்து உடலில் தடவிக்கொண்டால், கதிர் இயக்கத்தினால் தாக்கப்படாமல் தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது.

திரு-கோ. மக்கள் நலனுக்கு கம்யூ. கட்சி இயற்றிய பெருங்கேடு

தமிழ் நாடு கைதிகள் விடுதலையாகுமுன் அரசாங்கத்தை ஆதரித்த அலங்கோலம்

ஐ. மு. உறுப்பினர் சட்டநாதன் அதிர்ச்சி

"திரு—கொச்சி கம்யூனிஸ்டு கட்சி, மாநில ஆட்சி பீடத்திலிருக்கும் பி.-சோ. கட்சி மந்திரி சபைமீது கையாண்டு வரும் கொள்கை—'வழவழா' கொள்கை—பொதுவாக அதிருப்தியையே உண்டு பண்ணியிருக்கிறது ; அது மட்டுமல்ல — ஐக்கிய முன்னணியின் கோட்டைக்குள்ளேயே சஞ்சலத்தையும் கிளப்பி இருக்கிறது."

இவ்வாறு குறிப்பிட்டு, திரு—கொ. ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சட்டநாதன், எம். எல் ஏ, கம்யூனிஸ்டு கட்சி பொதுக் காரியதரிசிக்கு ஒரு அவசர தந்தி கொடுத்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை நிர்ணயக் குழு உறுப்பினர் பி. இராமமூர்த்திக்கும் இதே போன்ற ஒரு தந்தியும் அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்தத் தந்தியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :—

"திருவிதாங்கூர் தமிழ் நாடு கைதிகளை உடனே விடுதலை செய்யக் கோரும்படி, கட்சிக்கு உத்தரவு கொடுங்கள் ; அங்ஙனம் விடுதலை செய்யப்படாமல் சர்க்காரை ஆதரிப்பது, காட்டிக் கொடுப்பதாகும் ; எனவே, இந்த விஷயத்தில் குறுக்கிட்டு முடிவெடுக்க வேண்டும்."

தொழில் தகராறுகள்

பரிசீலனை விவரம்

புதுடில்லி, ஜன. 31— 1954-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை 49 ; இவற்றில், 47-தகராறுகளில் 23,320 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் ; 45 தகராறுகளினால் 2,29,722 ஆட்கள் தின வேலை நேரம் நஷ்டமாயிற்று.

இம்மாதமேற்பட்ட தகராறுகளில், 6 கதவடைப்புகள் ஏற்பட்டன ; இவற்றில் 7,483 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் ; இவற்றின் விளைவாக 1,38,812 ஆட்கள் தின வேலை நேரம் நஷ்டமாயிற்று. இந்தக் கதவடைப்புகளில் நான்கு மேற்கு வங்காளத்திலும், பம்பாய், சென்னை மாநிலங்களில் ஒவ்வொன்றும் ஏற்பட்டுள்ளன.

பரிசீலனை மாதத்தில் 32 தகராறுகள் தீர்ந்தன ; இவற்றில், 9 தகராறுகளில் தொழிலாளர்கள் பரிபூரண வெற்றியடைந்தனர் ; இரண்டில் ஓரளவு வெற்றி ; 12 தகராறுகளில் தோல்வியடைந்தனர் ; 9 தகராறுகளில் பலாபலன்கள் நிச்சயமாக நிர்ணயிக்க முடியவில்லை.

சென்னை அரசாங்கக் 'கோழி'கள்

அதிக முட்டைகளிடுகின்றனவாம்

சென்னை தேனாம்பேட்டை சர்க்கார் கோழிப் பண்ணைகளில் உள்ள கோழிகள், சாதாரணமான கோழிகள் இடும் முட்டைகளைவிட இரண்டு மடங்கு அதிகமான முட்டைகளிடுகின்றனவாம். தேர்ந்தெடுக்கப்பட்ட கோழிகளை கருத்தரிக்கச் செய்வதன் மூலம் இது சாத்தியமாகிறது என்று கூறப்படுகிறது.

இம்மாதிரியான உயர்ந்த ரகக் கோழிகள் ஆண்டொன்றில் சராசரி 120 முட்டைகள் இடுகின்றன என்றும், சாதாரண முட்டைகளைவிட இந்த ரகக் கோழிகள் இடும் முட்டை அரை அவுன்ஸ் எடை அதிகமாகவே இருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள உயர்ந்த ரக கோழி வகைகளைச் சேர்ந்த 1,000 கோழிக் குஞ்சுகள் வாங்கப்பட்டு வளர்த்துவரப்படுகின்றன. இவை யாவும், மாநிலத்திலுள்ள தேசிய விஸ்தரிப்புத் திட்ட, சமுதாய நல திட்டப் பிரதேசங்களுக்கு வினியோகிக்கப்படுமாம். இந்த ரகத்தைச் சேர்ந்தவைகளில் மேலும் 5,000 கோழிக் குஞ்சுகள் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட கோழிகள் ஆண்டொன்றில் சராசரி 160 முதல், 200 முட்டைகள்வரை இடும் சக்தி வாய்ந்தவைகளாம்!

விவசாயக் குடும்பங்கள் தென்னாட்டில்தான் அதிகம்

5 ஏக்கருக்கு குறைந்த நில உடைமைகள் ஏராளம்

கிராமக் குடும்பங்கள் பற்றி மத்திய சர்க்கார் தரும் புள்ளி விவரங்கள்!

விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்கள் இந்திய உபகண்டத்தின் எப்பகுதியைக் காட்டிலும், தென்னாட்டில்தான் அதிகமாக உள்ளன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

"இந்தியக் கிராமங்களில் குடியிருக்கும் குடும்பங்களின் தொகை சுமார் 5,80,00,000 ; இவற்றில் 1,76,00,000 குடும்பங்கள் விவசாயக் குடும்பங்களாகும்," என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

தென் இந்தியாவில்தான் விவசாயக் குடும்பங்கள் அதிகமாம் ; தென்னிந்தியக் கிராமங்களில் 50 சதவிகிதக் குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றன.

வடமேற்கு இந்தியாவில்தான் விவசாயக் குடும்பங்களின் தொகை குறைவாகும். இங்கே 10 சதவிகிதத்தினர்தான் விவசாயக் குடும்பத்தினராம்.

தென்னிந்தியாவில் உள்ள 62,00,000 விவசாயக் குடும்பங்களில் 5,10,000 குடும்பங்கள் தற்போதைய சென்னை மாநிலத்தில் இருக்கின்றனவாம்.

கிழக்கு இந்தியாவில் உள்ள 50,00,000 விவசாயக் குடும்பங்களில் 50 சதவிகிதத்தினர் பீகாரில் இருக்கின்றனராம்.

மத்திய இந்தியாவில் 30,00,000 குடும்பங்களும், தென் கிழக்கு இந்தியாவில் சுமார் 20 லட்சத்திற்கு குறைவான குடும்பங்களுமே உள்ளன.

கிராம மக்களில் 52 சதவிகிதம் ஆண்கள் ; மக்களில் 54 சதவிகிதத்தினர் வேலை செய்யும் வயதினர் ; 15 வயதுக்குக் குறைவானவர்களும், 55 வயதுக்கு அதிகமானவர்களும் முறையே 38, 8 சதவிகிதத்தினர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

தற்காலிகமாகவும், சில சந்தர்ப்பங்களிலும் விவசாயத்தில் ஈடுபடுவோரின் குடும்பங்கள் முறையே 85, 15 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கிராமக் குடும்பங்களில், விவசாயக் குடும்பங்கள் 30·4 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

கிராமப்புற குடும்பங்களிலுள்ள மக்களின் எண்ணிக்கை பற்றியும் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுமையும், பொதுவாக ஒவ்வொரு குடும்பத்திலும் 5.01 பேர் உள்ளனர் ; இவர்களில் ஆண்கள் 1.64 ; பெண்கள் 1.48 ; குழந்தைகள் 1.91 ஆகும்.

நிலச்சுவான்தார்களின் குடும்பங்கள்தான் பெரியன ; அவர்கள் குடும்பங்களில் 5·5 பேரும், குத்தகைதார் குடும்பங்களில் 5·4 பேரும், விவசாயிகள் குடும்பங்களில் 4·7 பேரும் உள்ளனர்.

வடமேற்கு இந்தியாவில்தான் குடும்பங்கள் பெரியன—(5·2.)

தென்னிந்தியாவில்தான் குடும்பங்கள் சிறியனவாம்—(4 9.)

கிராமக் குடும்பங்களில் வருமானம் உடையோர், பெரியவர்களை நம்பி வாழ்வோர் ஆகியோரின் கணக்கும் எடுக்கப்பட்டிருக்கிறது.

குடும்பத்திலுள்ள 5·01 நபர்களில் 1·57 பேர்கள் வருமானம் உடையவர்கள் ; 96 பேர் உதவி செய்பபவர்கள் ; 2·48 பேர் நம்பி வாழ்வோர்.

இதே கணக்கை, விவசாயக் குடும்பங்களைப் பொறுத்தமட்டில் கணக்கிட்டால் 4·470 பேர்களில் 2 42 பேர்கள் வருமானம் உடையவர்களாம்.

மக்களில் பெரும்பான்மையினர் குடும்பத் தொழிலையே பின்பற்றுகின்றனர் என்றாலும், விவசாயக் குடும்பங்களில், விவசாயத் தொழிலையே பின்பற்றுவது இல்லையாம்.

குடும்பத்தின் முக்கிய தொழிலைவிட உப-தொழில்களை உடையோர் 26 சதவிகிதமாவர் ; விவசாயக் குடும்பங்களில் இத்தொகை 21 சதவீதந்தான்.

கிராமங்களில், குடும்பங்களிடையே உள்ள நிலத்தின் அளவு சராசரி 7 5 ஏக்கர்களாகும் ; இதில் பயிரிடப்படும் நிலம் 6.6 ஏக்கர்கள் ; இவற்றில் சொந்தமாக வைத்திருக்கும் நிலம், 4.3 ஏக்கர்களாகும் ; மீதியை குத்தகை மூலம் பெறுகிறார்களாம்—(41.3)சதவிகிதம்.

விவசாயக் குடும்பங்களில் மட்டும் கணக்கெடுத்தால் நிலத்தின் அளவு நிலச்சுவான்களுக்கு 11.4 ஏக்கரும், குத்தகைதாரருக்கு 7.7 ஏக்கரும் பண்ணையாட்களுக்கு 2.9 ஏக்கரும் உள்ளனவாம்.

நிலப்பரப்புகளில் 50 சதவிகிதத்திற்குமேல் ஐந்து ஏக்கருக்குக் குறைவானதாகவே இருக்கின்றன.

குடும்பங்களிடையே உள்ள உழவுக் கருவிகள்—0.7 ; கால்நடை 2.2 ; ஆடுகள்—1.3 ; கோழி 0.9. கிராமப்புறங்களில் வீட்டுப் பிரச்சினை மிகவும் நெருக்கடியாக இருக்கிறதாம். 84 சதவிகிதம் கூரை போட்ட குடிசைகள் ; பெரும்பாலான வீடுகள் ஒரே அறைமட்டுமே கொண்டனவாகும்.

தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றம்

30—1—55 இரவு 8½ மணியளவில், தோழர் என். வி. மதிவண்ணன் தலைமையில் வடசென்னையிலுள்ள மேற்படி மன்றச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, கடந்த மூன்று மாத கால வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டது. பின்னர் தோழர் வி. எஸ். ஆனந்தன் அவர்கள் மன்றப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சில முடிவுகள் செய்யப்பட்டன.

சிவகளையில் அழகிரி படிப்பகம் துவக்கம்

25—1—55 மாலை 4½ மணிக்கு சிவகளை தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. ஆர். பி மணிமொழியன், அழகிரி படிப்பகத்தைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார். பின்னர், தோழர் பெ. த. பெருமாள் செயலாளராகவும், மு. இருளப்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்

26—1—55 காலை 9 மணிக்கு, கோவை தியாகராயர் படிப்பகத்தில் மேற்படி கழக ஆலோசனைக் கூட்டம் தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் முன்னிலையில், வீ. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். ஏ. இராசமாணிக்கம், ப. நாராயணன், இராசநாயகம், தங்கவேலு, சு. கண்ணன், தம்பிதுரை, இரா. சுந்தரம் ஆகியோர் எதிர்கால வேலைகள், தொழிலாளரிடையே உள்ள கட்டுப்பாடுகள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

அன்று மாலை, இராமநாதபுரம் அன்னமார் கோவில் மைதானத்தில் தோழர் பி. அய்யாசாமி தலைமையில் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எஸ். ஏ. இராசமாணிக்கம், உடுமலை ப. நாராயணன், இரா. சுந்தரம் ஆகியோர் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்தனர்.

உலக அரசியல்வாதிகளுக்கு பண்டித நேரு உபதேசம்

அணு ஆயுதங்கள் உற்பத்தியை நிறுத்துவீர் !

லண்டன், பிப். 2—

" மனித சமுதாயத்தை அழிக்கும் அபாயம் மிகுந்த அணு குண்டுகள், நீர்வளிக்குண்டுகள் ஆகியவற்றை அடியோடு ஒழிப்பதற்கு உலக அரசியல்வாதிகள் பாடுபட வேண்டும்,"

என்று, இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, லண்டனில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

" கொள்கைக்கான கருவியாக ஒரு காலத்தில் யுத்தம் இருந்து வந்தது ; ஆனல் அந்தக் கருவியை, நீர்வளிக்குண்டு பயனற்றதாக்கி விட்டது. அத்தகு குண்டுகளை தொடர்ந்து அபிவிருத்தி செய்வது நாகரீகத்திற்கு ஆபத்தாகும்," என்றும் எச்சரித்திருக்கிருர் நேரு.

" அணுகுண்டு, நீர்வளிக்குண்டு உற்பத்தியை நிறுத்திவிட வேண்டும். இனி அந்த குண்டு சோதனை நடத்தக் கூடாது," என்றும் நேரு குறிப்பிட்டிருக்கிருர்.

★

அணுசக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்த அகில உலக மாநாடு

84 நாடுகளை ஐ. நா. சபை அழைக்கிறது

நியூயார்க். பிப். 2—

அணுசக்தியை சமாதான முறையில் ஆக்கவேலைகளுக்கு உபயோகிப்பது பற்றி ஆலோசிக்க நடக்கும் அகில உலக மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு 84 நாடுகளுக்கு ஐ நா. சபையின் பொதுச் செயலாளர் டாக் ஹாமர்க்ஸ் ஜோயெல்ட் அழைப்பு அனுப்பியிருக்கிருர் எனத் தெரிகிறது.

இந்த மாநாடு ஜினிவா நகரில், வரும் ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி ஆரம்பித்து, 12 நாட்கள் நடைபெறும் என்று தெரிகிறது.

இந்தியாவின் பிரபல அணுசக்தி நிபுணரான டாக்டர் எச். ஜே பாபாவை இந்த மாநாட்டின் தலைவராக நியமிப்பதென்று முடிவாகியிருப்பதாயும் ஐ. நா. பொதுச் செயலாளர் கூறியிருக்கிருர்.

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா பிரான்ஸ், கானடா, பிரேஜில் ஆகிய 6 நாட்டுப் பிரதிநிதிகள் உபதலைவர்களாக நியமிக்கப்படுவர் எனத் தெரிகிறது.

இந்த மாநாட்டில் தாக்கலாகும் விளக்க உரைகள் எல்லாம் விஞ்ஞான தொழில் அணுக்க, நோக்கம் பற்றியே இருக்குமென்றும் அறியப்படுகிறது.

தொழில்துறை முன்னேற்றத்திற்காக அணுசக்தியைப் பயன்படுத்தும் ரஷ்யாவின் முதல் தொழிற்சாலை பற்றி ரஷ்யா விவரத்தை அனுப்ப உறுதி கொடுத்துள்ளதாயும், ஐ. நா அனுப்பியுள்ள அழைப்புகளில் குறிப்பொன்று சேர்க்கப்பட்டுள்ளது.

நேருவுடன் சவால் போட்டிக்கு அழைப்பு!

கோரக்பூர், பிப். 2—

கோரக்பூர் மாவட்டக் கழகத் தலைவர் கௌரி சங்கர் மிஸ்ரா ' தன்னைப்போல் யாராவது குதிக்கவோ, ஓடவோ, நிற்கவோ, நடக்கவோ முடியுமா,' என்று பண்டித நேரு விடுத்துள்ள சவாலை ஏற்றுக் கொண்டிருக்கிருராம்.

கௌரிசங்கருக்கு 61 வயதாகிறது. சவாலை ஏற்றுக் கொள்வது எந்தவிதத்திலும் தனது மூத்த சகோதரரான நேருவுக்கு தொல்லை தர அல்லவென்று அறிக்கை ஒன்று விடுத்திருக்கிருர்.

' தன்னுடைய பழைய நண்பர்களில் ஒருவர் இச்சவாலை ஏற்றுக் கொண்டிருக்கிருரே,' என்று, பண்டிதநேரு மகிழ்ச்சியடைய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எப்போது போட்டியை நடத்துவது, எங்கே நடத்துவது போன்ற பிரச்சினைகளையெல்லாம் நேருவின் பொறுப்பிலேயே அவர் விட்டுவிட்டார்.

மத்திய பிரதேசத்தில் இரும்புத் தொழிற்சாலை

ரஷ்யாவுடன் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

புதுடில்லி, பிப். 2—

இந்திய சர்க்காருக்கும்—ரஷ்யாவுக்கும் இடையே இந்தியாவில் இரும்பு—எஃகு தொழிற்சாலை ஒன்றை அமைப்பது பற்றிய ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாயிற்று.

இத்தொழிற்சாலையின் உற்பத்தி பத்து லட்சம் டன்களாகும்.

இந்த தொழிற்சாலை மத்திய பிரதேசத்தில் பிலாகி என்னுமிடத்தில் அமைக்கப்படும்.

1959 ஆண்டு டிசம்பர் 31-ந் தேதிக்குள் உற்பத்தி துவங்கும்படி ரஷ்யா தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்கும்.

இத்தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களை ரஷ்யாவே அளிக்கும். இதன் தொகை பூராவும் 12 தவணைகளில் இரண்டரை சதவிகித வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படும். இந்திய நாணயத்தில்தான் இப்பணம் கொடுக்கப்படும். இப்பணத்தில் ரஷ்யா இந்தியாவில் சாமான்களை வாங்கிக் கொள்ளவும் மேலும் ஸ்டர்லிங்காக மாற்றிக் கொள்ளவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆரம்பகால முதல் தொழிற்சாலையில் இந்திய நிபுணர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்திய நிபுணர்கள் ரஷ்யாசென்று அங்குள்ள இரும்பு—எஃகுத் தொழிற்சாலைகளைப் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

இத்தொழிற்சாலைக்கான இறுதித் திட்டத்தை விபரமாக ரஷ்யா தந்தபின்னர், அதை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதை முடிவு செய்ய இந்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

ரஷ்யாவில் இந்திய நிபுணர்கள் பயிற்சிபெற வசதி உண்டு. இதன் மூலம் இந்தியத் தொழிற்சாலையை இந்தியர்களே நடத்த இயலுமாறு செய்யப்படும்.

இத்திட்டத்தின் செலவு சுமார் ரூபாய் 100 கோடி என்றும், இச்செலவுத் தொகையில் சுமார் ரூ. 43.4 கோடியை ரஷ்யா ஏற்றுக் கொள்ளும் என்றும் தெரிகிறது

இறுதி திட்டத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிடில், திட்டத்தை தயாரித்ததற்கான செலவுகளுக்கென ரஷ்யாவுக்கு ரூ. 80 லட்சம் இந்திய சர்க்கார் கொடுக்கும்.

கம்யூனிஸ்டு அல்லாத நாடு ஒன்றுக்கு ரஷ்யா உதவி செய்யும் பெரிய நாடு இந்தியாதான் !

இந்த ஒப்பந்தம், ரஷ்ய, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயார் செய்யப்பட்டிருக்கிறது சட்டப் பிரச்சினைகள் எழும்போது ஆங்கில மொழியில் எழுதப்பட்ட ஒப்பந்தம்தான் அமுலில் இருக்கும்

இந்த ஒப்பந்தம் இந்திய சர்க்காருக்கு பல சலுகைகள் கொண்டதாக இருக்கிறதாம். மற்ற நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்ய, ரஷ்யாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

காஞ்சியில் கலை விருந்து !

5-2-55 இரவு 9-30 மணிக்கு
காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீசில்

புரட்சி நடிகர் M. G. ராமச்சந்திரன், M. G. சக்கரபாணி, நாராயணா பிள்ளை, G. சகுந்தலா மற்றும் M. G. R. நாடக மன்றத்தார் நடிக்கும்

இன்பக் கனவு

நாடகம்

சி. என். அண்ணதுரை

அவர்கள் தலைமையில் நடைபெறும்

கட்டணம்: ரூ. 3, 2, 1 (பெண்களுக்கு தனியிடம் உண்டு)

R. பாபு, பொறுப்பாளர்

திரு—கொச்சி மந்திரி சபைக்கு ஆபத்து

இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருகின்றன

திருவனந்தபுரம், பிப். 2—

பட்டம் தாணுவின் மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் மீண்டும் திரு-கொச்சி சட்டசபையில் கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

திருவாங்கூர் தமிழர் காங்கிரசின் உறுப்பினரான எஸ். சேஷாத்திரி நாத சர்மா என்பவர் ஒரு தீர்மானத்தையும், முன்னாள் பி. எஸ். பி. உறுப்பினரும், இப்போதைய சுயேச்சை உறுப்பினருமான டி. எஸ். ராமசாமி ஒரு தீர்மானத்தையும் கொண்டுவந்திருக்கின்றனர்.

இந்த இரண்டு தீர்மானங்களையும் சட்டசபைத் தலைவர் சபைக்குத் தெரிவித்தார். இதற்கு முன்னர் தமிழ் நாடு காங்கிரஸ் உறுப்பினரான ஏ. சிதம்பரநாத நாடார் ஒரு நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவந்தது, பின்னர் அதை வற்புறுத்தாதுவிட்டது அனைவரும் அறிந்ததே.

திரு—கொச்சி சட்டசபையில் 118 உறுப்பினர்கள் இருக்கின்றனர். காங்கிரஸ்—45 ; பி.-சோ. கட்சி—13 ; ஐக்கிய முன்னணி—32 ; தி.த.நா கா.க.-12 ; சுயேச்சை —10 ; நியமனம்—1.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு 60 உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் 46 - பேர், தி. த. நா. கா. 12 பேர், டி எஸ். ராமசாமி, கரையாளர் ஆகியோர் நம்பிக்கையில்லை எனும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

ஒரு தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டு மறுபடியும் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்ருல் இரண்டு தீர்மானங்களுக்கும் இடையே குறிப்பிட்ட காலம் செல்ல வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர்.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பிரபல சமூக சேவகரான துக்தோஜி மகாராஜ் என்பவர், அவுரங்காபாத் மாவட்டத்தில், தான், 60 கிராமங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாயும், கிராமங்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற அளவில் மாதிரி கிராமங்களாக அவற்றை தன்னுடன் உள்ள 3,000 தொண்டர்களின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளாராம்.

அரிசன வீடுகள் தாக்கப்படுகின்றன

குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொள்ளும் குண்டர்கள்

குவாலியர், பிப். 2—

மான்சிங், லக்கன் சிங் என்ற கொள்ளைக் கூட்டத் தலைவர்களின் சமீபத்திய தாக்குதல்களினல் ஏற்பட்டுள்ள நெருக்கடி மிகுந்த குழப்பமான நிலையை பைண்ட், மொரெனு ஆகிய கிராமங்களில் சில உள்ளூர் குண்டர்களும், கொள்ளைக்காரர்களும் அரிசன வீடுகளில் புகுந்து தாக்கி கொள்ளையிட்டு வருவதாகச் செய்தி கிடைத்துள்ளது.

பைண்ட் கிராமத்தில் போலீஸ் எல்லையிலிருக்கும் ஆதியார் என்னும் இடத்தில் மூன்று அரிசன வீடுகள் தாக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டனவாம்.

முன்போல சாதி இந்துக்களுக்கு வேலை செய்ய மறுத்துவிட்டதாயும், காங்கிரசை ஆதரித்ததாயும் கூறி, கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு பெரும்பாலான கொள்ளைகள் அரிசனங்கள்மீதே திருப்பப்பட்டனவாம்.

சிறப்புச் சொற்பொழிவு

6—2—55 மாலை 5 மணிக்கு, ஜெயின் போர்டிங் ஹாலில் (சர்தானந்த் ரோட், மாதுங்கா, பம்பாய்) அழகிரி சொற் பயிற்சி மன்றச் சார்பில் தோழர் பெ. வரதராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், டி. பி. அழகமுத்து மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை மாணவர் மன்றத் தேர்வுகள்

5—2—55 சனியன்று, தமிழ் நாடெங்கும் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், எஸ் எஸ்.எல்.சி. மாணவர்களுக்குக் காலை 9 மணிக்கும், இண்டர், பி ஏ. மாணவர்களுக்குக் காலை 10 மணிக்கும் சென்னை மாணவர் மன்றத் தமிழ்த் தேர்வுகள் தொடங்கி நடைபெறும்.

வாழ்வு விழா

4—2—55 காலை 7-30 மணிக்கு சென்னை, சோசியர் தெரு, எண் 7-ல், (கோபால்சாமி நாய்க்கர் கல்யாண மண்டபம்) தோழர் ஆ. திருவானந்தம்—தோழியர் பா. சுந்தராம்பாள் 'வாழ்வு விழா' தோழர் வ. சங்கரநாராயணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தஞ்சாவூரில் ஒரு மூட்டை நெல் விலை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இன்றைய விலை, ஒரு மூட்டை நெல் ரூ. 10¾ முதல் 11¼ ஆகும். தஞ்சை இரயில் வண்டி நிலைய பாஸ் டெலிவரிக்கு 48 படிகள்கொண்ட நெல்மூட்டை ஒன்று ரூ. 11½க்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. புழுங்கல் அரிசி ரூபாய்க்கு 2 படி ஆக விற்கப்படுகிறது.

சிறுமியைப் பெண்டாண்ட கயவன் !

2 ஆண்டு கடின காவல் ! 250 ரூபாய் அபராதம் !

உதகை, ஜன. 30—

ஆறு வயது நிரம்பப் பெற்ற பள்ளிச் சிறுமியை பெண்டாண்ட குற்றத்திற்காக, ஒரு மிஷன் பள்ளி ஆசிரியரான ரூபென்பால் என்பவருக்கு 2 வருட கடின காவல் தண்டனையும், ரூ. 250 - அபராதமும், அபராதம் கட்டத் தவறினல் மேலும் மூன்று மாத கடின காவல் தண்டனையும் தந்துள்ளார் உதகை துணை செஷன்ஸ் நீதிபதி.

கடந்த 1953-ம் ஆண்டு டிசம்பர் 16-ந் தேதி, கோதகிரியில் உள்ள மெதடிஸ்ட் மிஷன் பள்ளியில் படித்துவந்த 6 வயது சிறுமியிடம், பள்ளிக் கட்டிடத்திலேயே, அதே பள்ளியின் ஆசிரியரான ரூபென்பால் காமவெறிகொண்டு நடந்து கொண்டார் என்பது வழக்கு. பஞ்சாயத்தார்கள், ஆசிரியர் 'குற்றவாளி அல்ல' என ஒரே மனதாகக் கூறினர். பஞ்சாயத்தார் கருத்தை ஒப்ப மறுத்து ஆசிரியரை, மேற் குறித்துள்ளபடி கண்டித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என் அண்ணதுரை, எம் ஏ

பெங்களூர் மாநாடுகள்—பிப். 12, 13